**சி.பி. எண் 24/2025** **17.06.2026**

**ம.த.சாட்சி.1 ராஜேஸ்வரி குறுக்கு விசாரணை**

என் கணவருக்கு சேர வேண்டிய மாத சம்பளத்திற்காக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன். என் கணவர் பெயர் சுப்பராயன். 31.01.2013 அன்று என் கணவர் பணி ஒய்வு பெறும் வயதை எட்டிவிட்டதால் அவர் பணியில் சேரவில்லை என்றால் சரிதான். எனது மனுவில் ஜனவரி மாதம் 2013க்கு ஊதியம் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது என்றால் சரிதான். மனுவுடன் கூடிய இணைப்பில் அதனை தான் தெரிவித்தேன் என்றால் சரிதான். மேலும் இந்த சம்பள பாக்கிக்காக நான் 12 வருடங்கள் 2 மாதம் மற்றும் 24 நாட்களுக்கு வட்டி தொகையாக ரூபாய் 29,462/—ஐ கோருகிறேன் என்றால் சரிதான். நிர்வாகம் இந்த மாத சம்பளம் மற்றும் அதற்கான வட்டி தொகையை பெறுவதற்கு என் கணவருக்கு தகுதியில்லை என்று கூறுகிறது என்றால் சரியல்ல. நிர்வாகம் பராமரித்து வரும் சம்பள பதிவேட்டின் குறிப்புகளின்படி என் கணவருக்கு செப்டம்பர் மாதம் 2012 முதல் ஜனவரி மாதம் 2013 வரை சம்பள தொகையான ரூபாய் 67,120/—ஐ நிர்வாகத்தின் வங்கி கணக்கு உள்ள மைய வங்கி களம்பூர் கிளையின் வாயிலாக என் கணவருக்கு நிர்வாகம் அளித்துவிட்டது என்றால் சரியல்ல. என் கணவர் ரூபாய் 67,120/—ஐ நிர்வாகத்திடமிருந்து பெற்றாரா என்றால் எனக்கு தெரியாது. ஜனவரி மாத சம்பளத்தை என் கணவர் எற்கனவே பெற்றுக்கொண்டதால் அதனை நான் மீண்டும் கோர முடியாது என்றால் சரியல்ல. மேலும் என்

கணவருக்கு ஈட்டிய விடுப்பு தொகையாக ரூபாய் 1,00,375/– நான் கோருகிறேன் என்றால் சரிதான். அந்த தொகையை நான் கோர முடியாது என்றும் என் கணவருக்கு ஈட்டிய விடுப்பாக 15 நாட்கள் மட்டும் தான் உள்ளது. அந்த 15 நாட்களுக்கான ஈட்டிய விடுப்பு தொகை ரூபாய் 9,462/– அந்த தொகையை தர நிர்வாகம் தயாராக உள்ளது என்றால் நான் கோரியுள்ள தொகையை தான் நிர்வாகம் அளிக்க வேண்டும். இம்மனுவில் ஈட்டிய விடுப்பு நாட்கள் எந்த காலத்திலிருந்து எந்த காலம் வரை எவ்வளவு நாட்கள் என்று தெளிவாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. மேலும் ஈட்டிய விடுப்பு தொகையையும் சரியாக நாங்கள் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. அதனால் ஈட்டிய விடுப்பு தொகைக்கு நாங்கள் வட்டி கூறுவது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. என் கணவர் தாக்கல் செய்த ஐ.டி.34/2011ல் பிறப்பிக்கப்பட்ட தீர்வத்தினை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் நிர்வாகம் ரிட் மனு எண் 6405/2005 என்ற மனுவை தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியாது. அந்த ரிட் மனு நிலுவையில் இருக்கும்போது நிர்வாகம் பணி கொடை தொகையாக ரூபாய் 5,77,056/– என் கணவரிடம் வழங்கியது என்றால் சரியல்ல. மேலும் என் கணவர் கணக்கீட்டு மனு எண் 1/2013, 24/2025 மற்றும் நுகர்வோர் நீதிமன்ற திருவண்ணாமலை வழக்கு எண் 3/2022 ஆகியவைகளை எதிர்மனுதாரருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். மேலும் எதிர்மனுதாரர் நிர்வாகத்தில் தணிக்கை அறிக்கையின்படி ரூபாய் 6,48,363.40/– அளவிற்கு முறைகேடுகள் கண்டுபிடிக்கப்பட்டு தற்போது

நஷ்டத்தில் இயங்குவதால் தவறான கணக்கீடுகளின் படி நான் தாக்கல் செய்த இந்த மனு நிலைக்கத்தக்கதல்ல தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

Taken down before/by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him/her to be correct.

S UMAMAHESWARI

Digitally signed by S UMAMAHESWARI
Date: 2026.06.23 12:33:51 +0530

Presiding Officer